ஆகவே மீண்டும் மீண்டும் அதைப் பற்றிய பிரச்சனைகளை இப்போது எழுப்பாமலிருந்தால் அந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு உதவிகரமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

வீட்டுவாடகைக் கட்டுப்பாடு சட்டம்

*69 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வீட்டு வாடகை கட்டுப்பாடு சட்டம் மின் குழுவில் பணிபுரிவோருக்கு விரிவாக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : நம் வாழ்விற்கு ஒளியூட்டக் கூடிய இந்த மின்சார இலாகாவில் பணி புரிவோருக்கு இந்த வீட்டு வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தை விரிவாக்காமல் இருப்பது மாற்றான்தாய் மனப்பான்மையாகாதா? அந்த மனப்பான்மையை அகற்றி விட்டு இந்த வீட்டு வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தை அவர்களுக்கும் விரிவாக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : மின்சார இலாகா ஊழியர்கள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் என்ற பட்டியலில் வராததால், அதுபற்றி இப்போது எதுவும் செய்வதற்கில்லை.

மின்சாரக் கட்டண உயர்வு

*70 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் :
திரு. கே. வினாயகம் : } மாண்புமிகு
திரு. க. கோமதி சங்கர தீட்சிதர் :
மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-ஆம் ஆண்டில் மின்சார கட்டணம் உயர்த்தப்பட்டதா?

(இ) ஆம் எனில், எந்தத் தேதி முதல் எந்தெந்த வகைகளில் உபயோகப்படுத்தப்படும் மின்சாரத்திற்கு எந்தெந்த அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) ஆம்.

(இ) மன்றப் பேரவை முன் விவர அறிக்கை* ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன்: இந்த விவர அறிக்கையில் சாதாரண வீட்டுத் தேவைகளுக்காக வேண்டி என்ற தலைப்பில் திங்களொன்றில் முதல் 50 யூனிட்டுக்கு 30-32 காசு என்றும், இரண்டாவது 50 யூனிட்டுக்கு 25-27 காசு என்றும் மூன்றாவதாக அதற்கு மேற்பட்ட அளவிற்கு 22-24 காசு என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. வசதி படைத்தவர்கள்தான் அதிகமாக உபயோகப்

---

*613–614ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது